# புழங்குப் பொருள்களில் பண்பாடு

***பா. தனசெல்வம்***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

***முனைவர் ச. தமிழினியன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8992

## முன்னுரை

பண்பாடு என்னும் சொல் “பண்படுத்துதல்” என்ற சொல்லிலிருந்து உருவானது எனலாம். ஏனெனில் பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மக்களிடம் காணப்படும் பண்புகளைக் கொண்டு பண்பாட்டை மதிப்பிட முடியும். பண்பாடென்பது ஒரு தலைமுறையினர் மற்றொரு தலைமுறையினருக்கு விட்டுச் சென்ற வாழ்க்கை முறை அல்லது சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கை நடத்தும் முறையே ஆகும். இதனையே மானிடவியலாரும் அல்லது சமூகவியலாரும் பண்பாட்டின் இலக்கணமாகக் கூறுகின்றனர். புழங்குப் பொருளில் பண்பாடு குறித்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு - சொல்லாய்வு

பண்பாடு எனும் சொல்லாட்சி, பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப் பெறவில்லை. பண்பாடு எனும் சொல்லை பண்பாடு எனவும், பண்பாடு என்பதனைப் பண் படு எனவும் இலக்கியங்கள் பிரிக்கின்றனர். பண்பாடு எனும் சொல் பண்பாடு எனும் வினையடியாகப் பிறந்தது.

பண்டைய இலக்கியங்களில் பண், பண்பு, பண்ணை, பண்டம், பண்ணிய முதலிய சொற்கள் ஒரே அடிப்படையில் தோன்றியிருத்தலைக் காண்கிறோம்.

ஒழுங்குபட்ட ஓசையைச் செம்மைப்படுத்தப்பட்ட நிலத்தைப் “பண்ணை” என்றும், நன்றாகச் செய்யப்பட்ட பொருளைப் “பண்டம்” என்றும், சுவை கூட்டிச் செய்யப்பட்டதைப் “பண்ணியம்” என்றும் வழங்கியுள்ளனர். பண் என்னும் சொல்லின் அடியாகப் பண்பு, பண்புடைத்து, பண்புடைமை, பண்புடையார் எனும் சொற்றொடர்கள் வழக்கில் இருந்துள்ளன.

**"பண்பெனப் படுவது பாடறிந் தொழுதல்"**

**"பண்புற பாடறிவர் மாட்டு என்று காணப்படுகின்ற வரிகளில் "பண்பு", "பாடு"**

என்னும் சொற்கள் இணைந்து வருதலைக் காணும்போது பண்பாடு எனும் சொல்லாக்கம் இதன் வழியே உருவாகியிருக்கலாம் (டாக்டர் மீ.அ.மு. நாசீர் அலி நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.41) என்று டாக்டர் மீ.அ.மு. நாசீர் அலி நாட்டுப்புறப் பண்பாட்டியல் நூலில் குறிப்பிடுகிறார்.

மேலும் பண்பாட்டு சொற் பொருளுக்கு ஆங்கிலத்தில் ஊரடவரசந என்று சுட்டுவதற்கு நேராகவே "பண்பாடு" என்பது ஆள்படுகிறது. இந்தச் சொல்லை இப்பொருளில் முதலில் பயன்படுத்தியவர் அறிஞர் டி. கே.சிதம்பரநாத முதலியாருக்கே உரியது என்பர்.

"பண்பாடு" என்னும் சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப் பட்டது இச்சொல்லாகும். பயிரிடுவதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் நன்செய் நிலமாகும். ஆகவே பயன்படுத்தப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். அந்நிலமே நற்பொருள்கள்விளையஇடனாகஅமையும் சிறப்பினதாகும். பக்குவப்பட்ட மனிதனையும் பண்பட்ட மனிதன் என்போம்.

**"பண்பட்ட உள்ளமுடையரே பண்பாடு கொண்டவர்கள்"**

**(அ.தட்சிணாமூர்த்தி தமிழர் நாகரிகம் பண்பாடும், ப.4)**

என்று அ.தட்சிணாமூர்த்தி தமிழர் நாகரிகம் பண்பாடும் என்னும் நூலில் சொற்பொருள்கள் பற்றி விளக்கம் தருகின்றார்.

### புழங்கு பொருள்கள்

ஒரு சமுதாயத்தின் அல்லது இனக்குழு மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு வாய்மொழி சார்ந்த வழக்காறுகளும், வாய்மொழி சாராத வழக்காறுகளும், கல்வெட்டுகளும், சுவடிகளும், இலக்கியங்களும் துணை நிற்கின்றன, அவ்வகையில் மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற புழங்கு பொருட்கள் குறித்த ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. புழங்கு பொருட்கள் பண்பாட்டை நிர்ணயிப்பதற்கு அவை பயன்படும் புவியியற் சுழல் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் மக்களைத் தாங்கள் வாழ்கின்ற சுற்றுப்புறச் சுழலில் கிடைக்கின்ற புழங்கு பொருட்களைத் தேவைக்கேற்ப வடிவமைத்து பயன்படுத்திக் கொள்கின்றனர்.

மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்து காணப்படும் புழங்கு பொருட்களை அவர்கள் பிற உயிர்கள் போன்று மதிக்கப்படுகின்றமையைக் காண முடிகிறது.

புழங்கு என்பதற்குக் கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழியகராதி, "வழங்குதல்" என்றும், தமிழ் லெக்சிகன் "கையாளுதல் புழங்குதல்" என்றும் விளக்கம் தருகின்றன. எனவே புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்தி வந்த, வருகின்ற பொருட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

மக்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப தொன்று தொட்டு செய்து வருகின்ற கைவினைப் பொருட்கள் யாவும் புழங்கு பொருள் பண்பாட்டை அடையாளப் படுத்துகின்றன.

"இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப்படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள் சார் பண்பாடு என்றும் மானுடக் குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்கு பொருள் சார்ந்தகலைத்தொழில்வேலைப் பாடமைந்த பொருட்களும் புழங்கு பொருள் பண்பாட்டில் அடங்குகின்றன" (லூர்து, நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.135) என்று லூர்து குறிப்பிடுகின்றார்.

**புழங்குபொருளும் பண்பாடும்**

பண்பாடும் புழங்கு பொருட்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. ஏனெனில் புழங்கு பொருட்கள் அனைத்தும் பண்பாட்டோடு ஒன்றிணைந்தே காணப்படுகின்றன. அவை பண்பாட்டு மாற்றத்திற்கு ஏற்ப மாறுபட்டுக் காணப்பட்டாலும் மக்களின் வாழ்வியலோடு ஒன்றியே காணப்படுகின்றன. இதனை, பொருளும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை நறுக்குத் தெரித்தாற் போன்று மிகக் குறைந்தபட்ச வரையறையாகச் சொன்னால்,

**"பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள் கூறலாம்"**

***(பண்பாடு மானிடவியல், ப. 165)***

அந்த வகையில் ஒன்றையொன்று பரஸ்பரம் பிரதிபலிப்பவை என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார்.

மக்கள் முற்காலத்தில் மசாலாப் பொருட்களை அரைப்பதற்கு அம்மியும் குழவியும் பயன்படுத்தினர். ஆனால் நவீன காலத்தில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக "மிக்ஸி" என்ற இயந்திரப் பொருள் பரவலாக மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. எனினும் நவீன இயந்திரத்தின் வருகையால் மக்கள் தம் பழைய புழங்கு பொருட்களை முழுமையாக விலக்கிவிடவில்லை.

இன்றும் அவைகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. தற்போது திருமணச் சடங்கில் அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் வழக்கம் மக்களிடம் உள்ளது. அதைப் போன்று திருமணம் முடிந்த பின்னர் மணப்பெண்ணின் மடியில் குழவியைச் சிறிது நேரம் வைத்த பின்னரே தம்பதிகளை அனுப்புகின்ற மரபு உள்ளது. இவ்வாறு புழங்கு பொருட்கள் மக்களின் வாழ்வியலிலிருந்து விலகினாலும் சடங்கு முறைகளில் முதன்மை பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்கள் தானியங்களை இடிப்பதற்கும், பொடிப்பதற்கும் உரல், உலக்கைகளைப் பயன்படுத்தினர். உலக்கை என்னும் சொல்லிற்குத் தமிழ் அகராதி,

**"தானியங்களை உரலில் இட்டு இடிக்க<br>அல்லது குத்தப் பயன்படும்,<br>முனையில் இரும்பு பூண்<br>பொருத்தப்பட்ட உருண்ட வடிவ<br>நீண்ட மரச்சாதனம்<br>என்று பொருள் தருகிறது"**

***(தமிழ் அகராதி, ப. 151).***

மக்கள் இரண்டு விதமான உலக்கைகளைப் பயன்படுத்தினர்.

தானியங்களை உரலில் இட்டு இடிக்கவும் குற்றவும் பயன்படுத்தப்படும் உலக்கைகள் தேக்கு மரம், மருத மரம், கடம்ப மரம், புளிய மரம் முதலிய உறுதியான மரத்தினால் செய்யப்பட்டிருந்தன. இஃது நான்கு அடி முதல் ஐந்து அடி நீளமுள்ளவையாகக் காணப்படுகின்றன. இதன் இரு முனைப் பகுதியிலும் பூண் பொருத்தப்பட்டு இருக்கும். பூணானது ஒரு முனைப் பகுதியில் சமமாகவும், மற்றொரு முனைப்பகுதியில் சிறிது குவிந்தும் காணப்படும். இவ்வாறு பூண் உலக்கையின் முனைப்பகுதி சிதையாமலும், மாட்டப் பட்டிருப்பதால் விரிசலடையாமலும் நீண்ட காலம் பயன்படும். மஞ்சள், மல்லி, வத்தல் முதலியவற்றை இடிப்பதற்குக் கழுந்துலக்கையினைப் பயன்படுத்தினர். இது மூன்று முதல் நான்கு அடி நீளமுடையதாகவும் பூண் பொருத்தப்படாத நிலையில் காணப்படும். முற்காலத்தில் பாறையில் தானியங்களை இட்டு உலக்கையில் இடித்தனர். பின்னர் மரம் மற்றும் கல்லால் செய்யப்பட்ட உரலில் தானியங்களை இட்டு இடித்தனர். இவ்வாறு இடிக்கும் போது இரண்டு உலக்கைகளைப் பயன்படுத்துவதும் உண்டு. உரலில் தானியங்களைக் குத்தும் போது பழந்தமிழர்கள் வள்ளைப் பாடலைப்

பாடியுள்ளனர். இதனை, கபிலர் திருவள்ளுவ மாலையில் வள்ளைப் பாட்டின் இன்னிசை கேட்டுக் கோழிகள் கண்ணுறங்கியதாகச் சிறப்பித்துக் கூறுகிறார்.

தற்போது அரவை நிலையங்கள் வந்த பிறகு மிகவும் எளிதாக மக்கள் தானியங்களைப் பொடிக்கவும், இடிக்கவும் செய்து கொள்கின்றனர். இதன் காரணமாக உலக்கையின் பயன்பாடு குறைந்து விட்டது. ஆனால் சடங்கு சார்ந்தும், மக்களின் நம்பிக்கை சார்ந்தும் உலக்கையின் பயன்பாடு பண்பாட்டிலுள்ளது.

## முடிவுரை

மனிதன் பல்வேறு கலாச்சாரத்துடன் பழக்க வழக்கத்துடன் வாழ்கிறான். காலையில் எழுவது முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் தன்னை அறியாமலேயே பலவகை பண்பாடுகளைத் தனக்குள் செயல்படுத்துகிறான். இவ்வாறு சமுதாயம் தனக்கு விதித்துள்ள எழுதப்படாத சட்ட திட்டங்களுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். இவை தனக்குப் பழக்கமானதாகச் செய்து கொண்டாலும், அதனுள் புதைந்துள்ள பண்பாட்டினை உணராதிருக்கிறான்.

அன்றாட வாழ்வில் இது போன்று பயன்படுத்தும் பொருள்களும் உள்ளன. அவை உணவு வகைகள், புழங்கும் பாத்திரங்கள், ஆடை, அணிகலன் என்னும் பெயர்களை உடையதாயினும் புழங்கு பொருள்கள் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டவை. புழங்கு பொருட்கள் பெரும் பயன்பாட்டைப் பெற்றுத் திகழ்கின்றன. இத்தகைய நிகழ்வுகளில் புழங்கு பொருட்கள் வெறும் பொருளாக மட்டும் திகழாமல் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றன அல்லது வணங்குகின்ற பொருளாக விளங்குகின்றன. இதிலிருந்து அஃறிணைப் பொருளாகக் காணப்படும் புழங்கு பொருட்கள் பண்பாட்டைப் பெறும் நிலையில் உயர்திணைப் பொருட்களாக மாற்றம் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.